**DEPOSITION OF WITNESS**

**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | **Case No.CC.23 of 2019** |
| **Preliminary Register** | **:** | |
| **Sessions** | **:** | |

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **Prosecution :** | **PW4** |
| | **Defence :** | |
| | **Court :** | |

**Name**/பெயர் **:** ராமலிங்கம்

**Father's/ Husband Name :** மருதை

தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.01.2023.**

**முதல் விசாரணை**

நான் திருப்பட்டுரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கலியமூர்த்தியை எனக்கு தெரியும், கடந்த 14.12.2016 ம் தேதி நான் எதுமலைக்கு வேலை விஷயமாக இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டு திரும்ப ஊருக்கு வரலாம் என்று வந்து கொண்டிருந்தேன், கலியமூர்த்தி திருப்பட்டுரிலிருந்து எதுமலை ரோட்டில் இருசக்கர வாகனத்தில்

கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இரவு 7.40 மணியளவில் எங்கள் ஊருக்கு கிழக்கே உள்ள கவுண்டர் தெரு அருகே வந்த போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வினு என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்ட அவருக்கு பின்னால் விஜய் என்பவர் அமர்ந்து கொண்டு அதிவேகமாக வந்து கலியமூர்த்தி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து நடைபெற்றது, சம்பவ சமயத்தில் நான் வினு ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்து கொண்டிருந்தேன், அவரை தூக்கி பார்த்த போது தலையில் காயம் ஏற்பட்டு அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார், விபத்தை ஏற்படுத்திய வினுவுக்கும் அவருக்கு பின்னால் அமர்ந்து வந்த விஜய் என்பவருக்கும் காயம் ஏற்பட்டிருந்தது, நான் அவரது உறவினருக்கு விபத்து குறித்து தகவல் தெரிவித்தேன், 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது, பிரேத விசாரணையின் போது நான் உடன் இருந்தேன், விபத்தை ஏற்படுத்திய எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும், எதிரியை அடையாளம் காட்டப்படுவதற்காக 07.02.2023 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.